RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING — மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 254 | செப்டம்பர் 18, 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# இரு வகை ஆதரவாளர்களை பெற்றுள்ள மோடி

சென்னை, செப்.18-

பிரதமர் நரேந்திர மோடி தனது 76-வது வயதில் இன்று அடியெடுத்து வைக்கிறார். இந்த 75 வயதில் அவர் அடைந்துள்ள உயரம், ஏற்படுத்தியுள்ள தாக்கம் அசாதாரணமானது. ஒரு சாதாரண தேநீர் விற்கும் சிறுவனாக இருந்தவர், இன்று உலகின் மிக முக்கிய தலைவர்களில் ஒருவராக உருவெடுத்திருக்கிறார்.

தோல்வியைச் சந்திக்காத தொடர் முதல்வராகவும், தொடர் பிரதமராகவும் 24 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்து வருகிறார். அரசுப் பதவியை அதிக காலம் தொடர்ந்து வகிப்பவர் அவர். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் பதவிக் காலத்தில் நேருவை பின்னுக்குத் தள்ளியவர் அவர். அவரது காலத்தில்தான் பாஜக உலகின் மிகப் பெரிய கட்சியாக உருவெடுத்துள்ளது. 240 மக்களவை உறுப்பினர்களையும், 117 மாநிலங்களவை உறுப்பினர்களையும் கொண்டிருப்பதோடு, 22 மாநிலங்களில் ஆளும் கட்சியாகவும் அது திகழ்கிறது.

அரசியலுக்காக அவர் தொடர்ந்து விமர்சிக்கப்படுகிறார். ஆனாலும், தவறான நடத்தைக்காக அவர் விமர்சிக்கப்படுவதில்லை. அவரது நடத்தை எதிர்ப்பாளர்கள் பலரை அவர்பால் ஈர்த்துள்ளது. கொள்கைக்கு உட்பட்டும், கொள்கைக்கு அப்பாற்பட்டும் அவரை ஆதரிக்கும் பலரை அவர் பெற்றுள்ளார்.

அறிவுத் தளத்தில், கொள்கை ரீதியாக நரேந்திர மோடியை தொடர்ந்து எதிர்த்து வந்தவர்களில் ஒருவர் முத்த பத்திரிகையாளர் எம். ஜே.அக்பர். பின்னாளில் அவர் மோடி ஆதரவாளராக மாறினார். தான் மாறியதற்கான காரணம் குறித்து மார்ச், 2014-ல் அவர் ஒரு கட்டுரை எழுதினார்.

அந்தக் கட்டுரையில், "பொதுவெளியில் பேசுபவர் யாராக இருந்தாலும் அவர்கள் மேடையேறுவதற்கு முன் ஏதோ ஒரு வகையில் தயாராகித்தான் வருகிறார்கள். ஆனால், யாரும் முழுமையாக தயாராக முடியாத ஒரு சூழல் உண்டு என்றால் அது திடீரென ஏற்படும் நெருக்கடி நிலைதான். அதிலும் ஒரு நபரின் உயிருக்கே ஆபத்து நேரிடுவது என்பதைவிட அவருக்கு பெரிய நெருக்கடி வேறில்லை. அத்தகைய தருணத்தில் அவரின் எதிர்வினை பகுத்தறிவு சார்ந்து இருப்பதைவிட, உணர்ச்சிப்பூர்வமான மனதில் இருந்தே வெளிப்படுகிறது.

நரேந்திர மோடியின் பாட்னா பேரணியில் குண்டுகள் வெடித்தன. அவை அங்கு கூடியிருந்த மக்களை மட்டுமல்ல, அவரையும் குறிவைத்தே வீசப்பட்டவை. அப்போது அவரிடம் இருந்து வெளிப்பட்ட உடனடி எதிர்வினை மிகவும் கவனிக்கத்தக்கது. இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் இரு தரப்பிடமும் அவர் ஒரு வலிமையான கேள்வியை முன்வைத்தார். அது நம் நாட்டின் முக்கிய சவாலின் மையப் புள்ளியைத் தொடுவதாகவும், அதற்கான தீர்வை கொண்டிருப்பதாகவும் அமைந்திருந்தது. அந்த இரண்டு பெரும் சமூகங்களையும் ஒரு முடிவை எடுக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்: அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொள்ளலாம், அல்லது வறுமை எனும் அவமானகரமான சாபத்தை எதிர்த்து ஒன்றிணைந்து போராடலாம். இப்படித்தான் மோடி எதிர்வினையாற்றினார்.

மோடி உணர்ச்சிவசப்பட்டிருந்தால் கூட யாரும் அவரை குறை சொல்லி இருக்க மாட்டார்கள் என்ற சூழலிலும் அவர் தெளிவான பார்வையுடனும், ஒரு



பொருளாதாரக் கண்ணோட்டத்தை செயல்படுத்தும் உறுதியுடனும் செயல்பட்டார்.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று மோடி ஆற்றிய உரையில், பொதுச் சேவையில் இருப்பவர்களின் மதம் இந்திய அரசியலமைப்புச் சட்டம்தான் என்று கூறி இருந்தார்.

அவர் மீதான விமர்சனங்களில் எப்போதும் இடம்பெறக்கூடியது குஜராத் கலவரம். அந்த கலவரம் நடந்தபோது மற்ற பத்திரிகையாளர்களைப் போலவே நானும் அது குறித்து கேள்விகளை எழுப்பி இருந்தேன். முரண்பாடான விஷயம் என்னவென்றால் இந்த கேள்விகளுக்கு ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கமே தனது 10 ஆண்டு கால ஆட்சிக் காலத்தில் பதில் அளித்துவிட்டது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்துக்கு விசுவாசமான அமைப்புகள் மோடிக்கு எதிராக 10 ஆண்டுகளாக தீவிர விசாரணையை மேற்கொண்டன. மோடிக்கு எதிராக ஏதேனும் ஒரு ஆதாரத்தையாவது கண்டறியும் பணி அரசின் ஒவ்வொரு முக்கிய அமைப்பிடமும் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், அவர்களால் அப்படி எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை. உச்ச நீதிமன்ற விசாரணையிலும் மோடி குற்றமற்றவர் என நிரூபிக்கப்பட்டுவிட்டது..." என்று மோடியின் புகழ்பாடும் இந்தக் கட்டுரையில் இன்னும் பல விஷயங்கள் உள்ளன.

தமது தொடக்ககால அரசியல் கண்ணோட்டத்தின் பின்னணியிலேயே அரசியல் கட்சிகளையும், தலைவர்களையும் காலமெல்லாம் எடை போடும் பத்திரிகையாளர்கள் நிறைந்த ஒரு காலகட்டத்தில், நீண்ட காலம் காங்கிரஸ் கட்சியில் பணியாற்றிய, அக்கட்சியின் செய்தித் தொடர்பாளராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த எம்.ஜே. அக்பர் இவ்வாறு வெளிப்படையாக தனது பார்வை மாற்றத்தை வெளிப்படுத்தியது சக பத்திரிகையாளனாக எனக்கு ஆச்சரியத்தையே அளித்தது.

ஆனாலும், எம்.ஜே.அக்பரின் கீழ் பணிபுரிந்து அவரைப் பற்றி நன்கு அறிந்த ஒரு மூத்த பத்திரிகையாளர், அவரின் ஆளுமை குறித்து பேசி நான் கேட்டிருந்ததால் அந்த ஆச்சரியம் நீண்ட நேரம் நீடிக்கவில்லை.

நரேந்திர மோடி தேர்தலில் வெற்றி பெறுவாரா, பிரதமர் ஆவாரா என்பது தெரியாத ஒரு காலகட்டத்தில் துணிந்தும் வெளிப்படையாகவும் அவரை ஆதரித்தவர் எம். ஜே.அக்பர். ஆதரவாளராக மட்டுமின்றி, பாஜகவிலும் இணைந்து, அக்கட்சி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெளியுறவுத் துறை இணை அமைச்சராகவும் பதவி வகித்தவர் அவர்.

எம்.ஜே.அக்பர் ஒரு ரகம் என்றால், ஷெஹ்லா ரஷீத் வேறொரு ரகம்.

ஆகஸ்ட் 5, 2019-ல் துணிச்சலான ஒரு முடிவை மோடி அரசு எடுத்தது. ஜம்மு காஷ்மீருக்கு அளிக்கப்பட்டிருந்த சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்து, அந்த மாநிலத்தை இரண்டு யூனியன் பிரதேசங்களாக அது மாற்றியது.

இது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அரசின் முடிவுக்கு எதிராக தொடர் போராட்டங்கள் ஆங்காங்கே நடைபெற்றன.

அப்படியான ஒரு தொடர் போராட்டம் டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர்கள் சங்கம் சார்பில் முன்னெடுக்கப்பட்டது. இந்த போராட்டத்தை முன்னெடுத்த முக்கியமானவர்களில் ஒருவர் சங்கத்தின் துணைத் தலைவரும், அரசியல் செயல்பாட்டாளருமான, ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்தவருமான ஷெஹ்லா ரஷீத்.

இந்தியிலும் ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசக்கூடிய அவர், சக மாணவர்களை ஒன்று திரட்டுவதில் முக்கிய பங்கு வகித்தவர். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை அரசியலமைப்பு உரிமைகளை ஆபத்தில் ஆழ்த்தி இருப்பதாக பதியவைத்த ஷெஹ்லா ரஷீத், பாஜகவுக்கு எதிராகவும், நரேந்திர மோடிக்கு எதிராகவும் தொடர் பரப்புரைகளை மேற்கொண்டார்.

எனினும் சில ஆண்டுகளுக்குப் பிறகு, சட்டப்பிரிவு 370 நீக்கப்பட்டதால் ஜம்மு காஷ்மீரில் ஏற்பட்ட ஆரோக்கியமான மாற்றங்களைப் பார்த்து மோடி ஆதரவாளராக மாறினார். நவம்பர் 2023-ல் ஏஎன்ஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், "தற்போது நாம் நல்ல நோக்கத்துடன் செயல்படும் ஒரு நிர்வாகத்தைக் காண்கிறோம். பிரதமர் விமர்சனங்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. தனது செல்வாக்கு சரிந்தாலும் பரவாயில்லை என்று கருதி பல துணிச்சலான முடிவுகளை அவர் எடுத்துள்ளார்.

அவர் விமர்சனங்களைப் பொருட்படுத்துவதில்லை. நாட்டின் நலனுக்காக உழைக்கும் சுயநலமற்ற மனிதர் அவர். உள்துறை அமைச்சரும், அக்காலத்தில் யார் என்ன விமர்சித்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் காஷ்மீரில் அமைதியை அவர் நிலைநாட்டியுள்ளார்.

ஜம்மு - காஷ்மீரில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்குப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரின் கொள்கைகளே காரணம். அங்கு நடைபெற்று வந்த போராட்டங்கள், கிளர்ச்சிகள் மற்றும் ஊடுருவல் சம்பவங்களுக்கு அவர்கள் ஒரு அரசியல் தீர்வை உறுதி செய்துள்ளனர்.

அந்தச் சூழலை மாற்ற ஒரு துணிச்சலான நடவடிக்கை தேவைப்பட்டது. அதை அவர்கள் செய்தார்கள். அதற்காக அரசாங்கத்துக்கு, குறிப்பாக பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சருக்கு நான் பாராட்டு தெரிவிக்க விரும்புகிறேன்," என்று தெரிவித்துள்ளார்.

தற்போது தீவிர அரசியலில் இருந்து ஒதுக்கி, ஜம்மு காஷ்மீரில் உள்ள அரசு கல்லூரி ஒன்றில் உதவி பேராசிரியராக ஷெஹ்லா ரஷீத் பணியாற்றி வருகிறார். இவர் பாஜகவில் இணைய இருப்பதாக பேசப்பட்ட போதிலும் அவர் இணையவில்லை.

எம்.ஜே.அக்பர் மோடியின் கொள்கை ஆதரவாளராக மாறிய நிலையில், ஷெஹ்லா ரஷீத்தோ, கொள்கை ஆதரவாளராக அல்லாமல் செயல்பாட்டுக்கு மட்டும் ஆதரவு அளிப்பவராக தொடர்கிறார்.

## "டெங்கு உயிரிழப்புகளுக்கு தமிழக அரசின் அலட்சியமே காரணம்" - தினகரன்

சென்னை: செப்.18-

"முறையான திட்டமிடல் இல்லாமல் செயல்படும் மருத்துவத் துறையின் அலட்சியப் போக்கே தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பாதிப்பால் 9 பேர் உயிரிழப்புக்கு காரணம்" என அமமுக பொதுச் செயலர் டிடிவி தினகரன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழகத்தில் சுமார் 16 ஆயிரம் பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, அதில் 9 பேர் உயிரிழந்திருப்பதாக ஊடகங்களிலும், நாளிதழ்களிலும் வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த அதிர்ச்சியையும், வேதனையையும் அளிக்கிறது.

டெங்கு காய்ச்சலால் ஏற்படும் பாதிப்புகளை முன்கூட்டியே கண்டறிந்து, போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும்,



டெங்குவைப் பரப்பும் ஏடிஸ் (Aedes) கொசுக்களை ஒழிப்பதிலும் சுகாதாரத்துறை காட்டிய அலட்சியமே 9 பேரின் உயிரிழப்புக்குக் காரணம் எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப பரவும் நோய்த்தொற்றுகளின் பாதிப்பு அதிகரித்த பின்னரே நடவடிக்கை எடுக்கும் அணுகுமுறையைக் கைவிட்டு, பாதிப்பு ஏற்படுவதற்கு முன்பாகவே அதற்குரிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு சுகாதாரத்துறைக்கு உண்டு என்பதை இனியாவது உணர்ந்து செயல்பட வேண்டும்.

எனவே, தமிழகத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் டெங்கு காய்ச்சலுக்கு அடிப்படைக் காரணமான கொசுக்களை ஒழிக்கும் பணிகளைத் தீவிரப்படுத்துவதோடு, டெங்குவால் பாதிப்புக்குள்ளாகும் நோயாளிகளுக்கு உரிய சிகிச்சைகளை வழங்கிட வேண்டும் சுகாதாரத்துறையையும், தவெக அரசையும் வலியுறுத்தும் இந்நேரத்தில், பொதுமக்களும் மிகுந்த கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் இருந்திட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

## "மதுரை மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு விழாவை சிறப்பாக நடத்தியுள்ளோம்" - அமைச்சர் ரமேஷ் பெருமிதம்

மதுரை: செப்.18-

"புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள தவெகவினருக்கு என்ன தெரியும் என்ற கடந்த கால ஆட்சியாளர்கள் விமர்சனங்களுக்கு கடந்த மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு விழாவை முதல்வர் வழிகாட்டுதலின்படி சிறப்பாக நடத்தியுள்ளோம்," என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் மதுரையில் இன்று தெரிவித்தார்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் குடமுழுக்கு விழா முடிந்த பிறகு கோயிலுக்கு எதிரிலுள்ள புதுமண்டபத்தில் சட்டம் மற்றும் எரிசக்தி துறை அமைச்சர் நிர்மல் குமார், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் ஆகியோர் செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது அமைச்சர் ரமேஷ், "கடந்த கால ஆட்சியாளர்கள், புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள தவெகவினருக்கு என்ன தெரியும், இவர்கள் ஆட்சி செய்து விடுவார்களா? என்ற பார்வை இருந்தது. அவற்றைப் பற்றி கவலைப்படாமல் உண்மையாகவே மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்படுகிறோம்.

அதன்படி 3 மாதத்திற்கு




முன்பாகவே மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு விழா தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடத்தி ஆலோசனை செய்தேன். வீரவசந்தராயர் மண்டபப் பணிகளை துரிதப்படுத்தி விரைந்து முடிக்க அறிவுறுத்தினேன். தமிழக முதல்வர் வழிகாட்டுதலின்படி குடமுழுக்கு விழாவை சிறப்பாக நடத்தியுள்ளோம்.

குடமுழுக்கு விழாவின்போது மேல்தளத்தில் 9,500 பேருக்குமேல் உட்கார வைக்க முடியாது. அதற்கேற்றவாறுதான் பாஸ்கள் வழங்கியுள்ளோம். பொதுமக்கள் 2 ஆயிரம் பேருக்கும், ரூ.25 கோடி வரை கோயிலுக்கு உபயம் வழங்கிய உபயதாரர்கள், முன்னாள், இந்நாள் அமைச்சர்கள், எம்எல்ஏக்கள், எம்பிக்கள், மாநகராட்சி கவுன்சிலர்கள் ஆகியோர்களுக்கும் பாஸ்கள் வழங்கியுள்ளோம். வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என யாரையும் புறக்கணிக்கவில்லை. அனைத்து துறையினருக்கும் வழங்கியுள்ளோம்.

குடமுழுக்கு விழாவில் ட்ரோன் மூலம் தீர்த்தம் தெளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குடமுழுக்கு விழாவில் காலை 10 மணிக்கு பொது தரிசனத்திற்கு அனுமதி என அறிவித்திருந்தோம். ஆனால் காலை 8.30 மணிக்கே பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதித்துள்ளோம்.

குடமுழுக்கில் பங்கேற்றவர்களுக்கு தண்ணீர், பிஸ்கட் அடங்கிய பை இரண்டரை லட்சம் பேருக்கு வழங்கவுள்ளோம். கோயிலுக்குள் மொபைல் போன்களை பயன்படுத்தக்கூடாது என்பதில் அரசு உறுதியாக உள்ளது. பக்தர்கள் வீடியோ போட்டோ எடுத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மொபைல் போன்களுக்கு ரூ.5 கட்டணம் வசூலிக்க கட்டாயப்படுத்தவில்லை. கோயில் நிர்வாகம் நிதி நிலையைப் பொறுத்து வசூலித்துக் கொள்ளலாம் என அறிவுறுத்தினோம்.

அதன்படி பல கோயில்களில் கட்டணத்தை ரத்து செய்துவிட்டனர். கோயில்கள் சார்பில் யானைகள் வாங்கவில்லை. உயர் நீதிமன்ற உத்தரவுப்படி உபயதாரர்கள் மூலம் யானைகள் வாங்கி கொள்ளலாம் என்பதன்படியே கோயில்களுக்கு யானைகள் வாங்கியுள்ளோம்.

கோயில்களில் பிரசாத விலையை ஏற்றவில்லை. ஏற்கெனவே இருந்த விலைப்பட்டியலின் படியே விற்பனை செய்கிறோம். தனியார் வசமிருந்து பிரசாத விற்பனையை 12 கோயில்களில் துறை மூலம் நடத்துகிறோம். தரமான முறையில் பிரசாதம் வழங்குகிறோம். இதற்கென கூடுதலாக கட்டணம் வசூலிக்கவில்லை." இவ்வாறு அவர் கூறினார்.

## டாடா சன்ஸ் தலைவராக உள்ள சந்திரசேகரன் பதவிக்காலம் 5 ஆண்டுகள் நீட்டிப்பு

புதுடில்லி: செப்.18-

டாடா சன்ஸ் தலைவராக உள்ள சந்திரசேகரன், பதவிக்காலத்தை அடுத்த 5 ஆண்டுகள் நீட்டிக்கப்பட்டுள்ளது.

டாடா சன்ஸ் தலைவராக சந்திரசேகரன் உள்ளார். 63 வயதாகும் அவர் டாடா குழுமத்தில் 40 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார். 10 ஆண்டு காலம் தலைவராகவும் உள்ளார்.

இந்த பதவிக்காலம்2027 பிப்.,20 ல் முடிவடைய உள்ளது. இந்த பதவியில் தொடர விரும்பவில்லை என கடந்த சில நாட்களுக்கு முன்னர் அறிவித்து இருந்தார். இதனையடுத்து புதிய தலைவரை தேடும் பணியில் டாடா சன்ஸ் ஈடுபட்டு வந்தது.

இந்நிலையில், டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவராக மீண்டும் சந்திரசேகரன் நியமிக்கப்பட்டு உள்ளார். அடுத்த 5 ஆண்டுகள் இந்த பதவியில் தொடர்வதற்கு மும்பையில் நடந்த டாடா சன்ஸ் வாரியக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் டாடா சன்ஸ் நிறுவனத்தை பங்குச் சந்தையில் பட்டியலிடப்படவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## செப்.19ம் தேதி அன்று திமுக முப்பெரும் விழா



சென்னை: செப்.18-

வரும் செப்டம்பர் 19ம் தேதி அன்று திமுக முப்பெரும் விழா அக்கட்சியின் தலைவர் ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

ஆண்டுதோறும் தி.மு.க., சார்பில் கொண்டாடப்படும் முப்பெரும் விழா, கடந்த செப்டம்பர் 15ம் தேதி, சென்னையில் உள்ள அக்கட்சி தலைமை அலுவலகமான அறிவாலயத்தில் நடக்கும் என அறிவிக்கப்பட்டு இருந்தது. பிறகு கட்சி தலைவர் ஸ்டாலினுக்கு வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டதால் முப்பெரும் விழா ஒத்திவைக்கப்படுவதாக திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவித்தார்.

இந்நிலையில் திமுக வெளியிட்டுள்ள அறிக்கையில், "திமுக தலைவர் ஸ்டாலின் தலைமையில் கடந்த 15ம் தேதி நடைபெறவிருந்த திமுக முப்பெரும் விழா ஒத்திவைக்கப்பட்டு, தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்று அறிவித்திருந்தோம். தற்போது திமுக முப்பெரும் விழா வரும் 19ம் தேதி (சனிக்கிழமை) அன்று மாலை 5.00 மணியளவில், அண்ணா அறிவாலயத்தில் நடைபெறும்," எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர் பயணத்தின் போது அதிகரட்டி, உலிக்கல், ஜெகதளா, ஆகிய மூன்று பேரூராட்சிகளில்,

# திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும், வளமீட்பு பூங்காவின் செயல்பாடுகளை, நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு

நீலகிரி, செப்.18-

நீலகிரி மாவட்டம் அதிகரட்டி, உலிக்கல் மற்றும் ஜெகதளா ஆகிய மூன்று பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படும் வள மீட்பு பூங்காவின் செயல்பாடுகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு செய்தியாளர் பயணத்தின் போது நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:



நீலகிரி மாவட்டத்திற்குட்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிப்பகுதிகளில் சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்களை பாதுகாக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, பொதுமக்களிடம் இருந்து குப்பைகளை தூய்மைப்பணியாளர்கள் மூலம் முறையாக பெறப்பட்டு மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து பெறப்பட்டு வருகின்றன. அந்த வகையில், அதிகரட்டி, உலிக்கல் மற்றும் ஜெகதளா பேரூராட்சிகளில்திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மொத்தம்44,744 குடியிருப்பாளர்கள், 51 வார்டுகள் மற்றும் 16,913 வீடுகளை உள்ளடக்கியுள்ளன. அதிகரட்டி மற்றும் ஜெகதளா ஆகிய பேரூராட்சிகள் வீடுதோறும் சென்று குப்பை சேகரிப்பதில் 100% செயல்திறனை எட்டியுள்ளன. உலிக்கல் பேரூராட்சியில் சில வார்டுகள் தனியார் தேயிலைத் தோட்ட நிர்வாகமாக இருப்பதால் 95% சேகரிப்பு விகிதத்தைக் கொண்டுள்ளது. மேலும், இம்மூன்று பேரூராட்சிகளும் தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குப்பையை அதன் உற்பத்தியாகும் இடத்திலேயே தரம் பிரிப்பதில் 100% முழுமை பெற்றுள்ளன. இந்த மூன்று பேரூராட்சிகளும் கூட்டாக நாளொன்றுக்கு 5.78 டன்கள் (TPD) திடக்கழிவை உருவாக்குகின்றன. இதில் 3.04 டன்கள் மக்கும் ஈரக்கழிவு, 2.13 டன்கள் மக்காத உலர் கழிவு, 0.46 டன்கள் வண்டல் மண் (silt) மற்றும் 0.15 டன்கள் சுகாதாரக் கழிவுகள் ஆகியவை அடங்கும்.

மேலும், திடக்கழிவு மேலாண்மைக்கான செயலாக்கக் கட்டமை ப்புகள் அனைத்தும் அதிகரட்டி பேரூராட்சிக்குட்பட்ட நெடிகாடு பகுதியில் அமைந்துள்ள "வள மீட்புப் பூங்காவில்" (Resource Recovery Parks RRP) முழுமையாக ஒருங்கிணைக்க ப்பட்டுள்ளன. இப்பூங்கா மொத்தம் 5 ஏக்கர் பரப்பளவைக் கொண்டுள்ளது (இதில் அதிகரட்டி 3 ஏக்கர், உலிக்கல்1 ஏக்கர் மற்றும் ஜெகதளாவுக்காக 1 ஏக்கர்). ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ஒரே மாதிரியான வசதித் திறன்களைக் கொண்டுள்ளது. ஈரக்கழிவுகளைக் கையாள 1.5 மெட்ரிக் டன் (MT) திறன் கொண்ட ஒரு "விண்ட்ரோ" (windrow-Platform) மேடை மற்றும் உலர் கழிவுகளைக் கையாள 1.5 மெட்ரிக் டன் திறன் கொண்ட ஒரு "வள மீட்பு மையம்" (RRC) ஆகியவை இதில் அடங்கும். ஈரக்கழிவுகள் அந்தந்த வள மீட்புப் பூங்காக்களிலேயே "விண்ட்ரோ" (Windrow composting) முறையில் மட்க வைக்கப்பட்டு

நேரடியாக உரமாக மாற்றப்படுகின்றன. இதனால், இம்மூன்று உள்ளாட்சி அமைப்புகளும் 100% கழிவு சுத்திகரிப்புத் திறனுடன் செயலாக்க இடைவெளி ஏதுமின்றி செயல்பட்டு வருகின்றன.

மேலும், களப்பணிகள் மற்றும் செயல்பாடுகள் அனைத்தும் மொத்தம் 98 சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றன. இதில் 12 நிரந்தரப் பணியாளர்களும் (அதிகரட்டி 3 பேர், உலிக்கல் 5 பேர் மற்றும் ஜெகதளா 4 பேர்) மற்றும் 86 சுயஉதவிக் குழு (SHG) உறுப்பினர்களும் (அதிகரட்டியில் 28, உலிக்கல் 22 மற்றும் ஜெகதளா 36 பேர்) அடங்குவர். சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் தினசரி அடிப்படையில் குப்பை சேகரிப்பு, தரம் பிரித்தல், "விண்ட்ரோ" மேடை பராமரிப்பு மற்றும் மட்க வைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றனர். தயாரிக்கப்படும் இயற்கை உரங்கள் சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளால் விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளூர் விவசாய பொதுமக்களின் தேவைக்கேற்ப விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், சேகரம் செய்யப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் தார்சாலை அமைப்பதற்கும் மற்றும் உலர் கழிவுகள் பழைய பொருட்கள் சேகரம் செய்வோருக்கு விற்பனை செய்யப்படுகிறது என தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) குருராஜன், செயல் அலுவலர்கள் பிரதீப்குமார் (அதிகரட்டி), செந்தில்குமார் (உலிக்கல்), ரமேஷ்குமார் (ஜெகதளா), குன்னூர் வட்டாட்சியர் செந்தில்குமார் உட்பட பலர் உடனிருந்தனர்.

# 10 கிராமங்களுக்கான குடிநீர் குழாய் பழுது சீரமைப்பு



மானாமதுரை, செப்.18-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியத்தி ற்குட்பட்ட கீழமேல்குடி உள்ளிட்ட 10 கிராமங்களுக்குச் செல்லும் குடிநீர் குழாயில் ஏற்பட்ட பழுது, வட்டார வளர்ச்சி அலுவலரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதைத் தொடர்ந்து சீரமைக்கப்பட்டது.

தமிழக வெற்றிக் கழகத் தலைவரும் தமிழக முதலமைச்சருமான ச.ஜோசப் விஜய், கழகப் பொதுச்செயலாளரும் ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சருமான என். ஆனந்த், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் டி.கே.பிரபு ஆகியோரின் வழிகாட்டுதலின்படி கட்சி நிர்வாகிகள் நடவடிக்கை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. என்.ஆனந்த் மற்றும் டி.கே. பிரபுவின் அமைச்சரவைப் பொறுப்புகள் குறித்த விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சிவகங்கை தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ். முத்துபாரதி, மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் டி. இளங்கோவன் ஆகியோரின் வழிகாட்டுதலில், மாவட்டத் துணைச் செயலாளர் எஸ்.செல்வி, மாவட்டச் செயற்குழு உறுப்பினர் நல்லமணி, மானாமதுரை மேற்கு ஒன்றியச் செயலாளர் பி.சரண்ராஜ் தலைமையில், கீழமேல்குடி கிளைச் செயலாளர் முத்துராமலிங்கம் முன்னிலையில் குடிநீர் குழாய் பழுது தொடர்பாக வட்டார வளர்ச்சி அலுவலரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

கீழமேல்குடி, தெக்கூர், வளநாடு, வான்புரம், நெடுங்குளம், கிளங்காட்டூர், அன்னவாசல், அன்னவாசல் புதூர், அரிமண்டபம், தீயனூர் ஆகிய 10 கிராமங்களுக்குச் செல்லும் குடிநீர் குழாய் கடந்த ஒரு வாரமாக பழுதடைந்திருந்த நிலையில், தற்போது பழுது சரிசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் குடிநீர் வினியோகத்தில் ஏற்பட்டிருந்த சிக்கல் சரிசெய்யப்பட்டதாகவும், நடவடிக்கை மேற்கொண்ட நிர்வாகிகளுக்கு பொதுமக்கள் பாராட்டு தெரிவித்ததாகவும் கட்சி தரப்பில் கூறப்பட்டுள்ளது.



தந்தை பெரியார் 148வது பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மாநகர கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில்

# தந்தை பெரியார் படத்திற்கு தாம்பரம் மாநகர செயளாலர், மேயர், துணை மேயர் ஆகியோர் செலுத்தி சமூக நீதி நாள் உறுதி மொழி ஏற்றனர்

தாம்பரம், செப்.18-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த செம்பாக்கம் பகுதியில் பகுத்தறிவு தந்தை பெரியார் அவர்களின் 148வது பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மாநகர கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் பகுத்தறிவு தந்தை பெரியார் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி உறுதிமொழி ஏற்கும் நிகழ்வு தாம்பரம் மாநகர தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் மனோகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் , மாநகர செயலாளர் எஸ். ஆர். ராஜா, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி துணை மேயர் கோ காமராஜ், ஆகியோர் கலந்துகொண்டு பகுத்தறிவு பெரியார் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றனர்.

இந்நிகழ்வில் பகுதி செயலாளர் இரா.சுரேஷ், மாமன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் உடன் இருந்தனர்.





# பிரதமர் நரேந்திரமோடி பிறந்த நாள் விழா; செங்குன்றத்தில் அன்னதானம்

மாதவரம், செப்.18-

மாதவரம் தொகுதி செங்குன்றம் ஜி.என்டி., சாலை ஸ்ரீகோதண்டராமன் கோவில் அருகில் பிரதமர் நரேந்திரமோடியின் பிறந்த நாளையொட்டி புழல் மண்டல் பாஜக சார்பில் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி புழல் மண்டல் துணைத்தலைவர் வைகுண்ட பெருமாள் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது. மண்டல் அமைப்பாளர் முரளிகிருஷ்ணன் , மண்டல் பொதுசெயலாளர் மாலாமதியழகன், விவசாய பிரிவு தலைவர் மதன்குமார் மற்றும் சீனிவாசன், முரளிசெட்டியார்,ரவி,முருகேசன், மதியழகன், சரஸ்வதி, சுரேஷ்,வேல்முருகன், குசேல்குமார், சத்தியநாராயணன், ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக கே.ஆர்.வி.கல்வி அறக்கட்டளை நிறுவனர் கே.ஆர்.வெங்கடேசன் கலந்து கொண்டு ஸ்ரீகோதண்டராமன் கோவிலில் பிரதமர் மோடி நலமுடன் வாழவேண்டி சிறப்பு பூஜைகள் செய்து பின்னர் சுமார் 300க்கும் மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கினார். இதில், பாஜக அனைத்துநிலை நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



# தந்தை பெரியார் பிறந்தநாள்: சிவகங்கையில் தவெகவினர் மாலை அணிவித்து மரியாதை

சிவகங்கை, செப்.18-

தந்தை பெரியாரின் பிறந்தநாளையொட்டி, சிவகங்கையில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். 2026 செப்டம்பர் 17 பெரியாரின் 148-வது பிறந்தநாள் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் குழந்தைராணி நாச்சியார் தலைமையிலும், சிவகங்கை தெற்கு மாவட்ட தவெக செயலாளர் எஸ். முத்துபாரதி முன்னிலையிலும் நடைபெற்ற நிகழ்ச்சியில், கட்சி நிர்வாகிகள் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட இணைச் செயலாளர் காளையார்கோவில் காளீஸ்வரன், மாவட்ட பொருளாளர் கண்ணதாசன், நகரச் செயலாளர் தளபதி கோபி, ஒன்றியச் செயலாளர்கள் தினேஷ்கர்ணன், பில்லத்திக் கண்ணன், ஆரோக்கியராஜா, மதன், மாவட்ட அணி நிர்வாகிகள் தினேஷ், தமராக்கி பிரபு, வழக்கறிஞரணி சூரக்குளம் சுரேஷ், கண்டாங்கிபட்டி பாலா, நகர் இணைச் செயலாளர் கணேஷ்குமார், துணைச் செயலாளர் முத்துப்பாண்டி, டி.என். டி. வெங்கடேஷ்துரை உள்ளிட்ட தவெக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



■ சென்னை, திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பாடியநல்லூர், ஜி என் டி சாலையில் இந்து முன்னணி அமைப்பு சார்பாக ஸ்ரீ விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு தமிழகம் முழுவதும் விநாயகர் பெருமானின் பிறப்பை கொண்டாடி வரும் நிலையில் அதன் ஒரு பகுதியாக விநாயகர் சிலை பிரம்மாண்டமாக வைத்து விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. விநாயகர் சிலை வைத்த முதல் நாளிலிருந்து ஏழு நாட்களுக்கு தினமும் ஒரு உபயதாரர் பூஜை செய்து பிரசாதம் பொது மக்களுக்கு வழங்கப்படுகிறது. அனைத்து ஏற்பாடுகளையும் பாசப்பறவை நற்பணி மன்றம் நான்கு ஆண்டுகளாக சிறப்பாக செய்து வருகின்றனர்.



# தந்தை பெரியாரின் 148-வது பிறந்தநாள் விழா: கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க., சார்பில் மரியாதை

கிருஷ்ணகிரி, செப்.18-

தந்தை பெரியாரின் 148-வது பிறந்தநாள் விழா, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பில் கிருஷ்ணகிரியில் சிறப்பாக நடைபெற்றது. கிருஷ்ணகிரி திமுக அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் தலைமை வகித்தார்.

விழாவையொட்டி தந்தை பெரியாரின் திருவுருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேலுமணி, மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் அன்பரசு, மாவட்டப் பொருளாளர் கதிரவன், மாநில விவசாய அணி வெங்கடேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தினேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராஜ், கிருபாகரன், மாவட்ட துணைச் செயலாளர் கோவிந்தசாமி, ஒன்றியச் செயலாளர் சரவணன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள் மற்றும் திமுகவினர் பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் தந்தை பெரியாரின் சமூகநீதி, சமத்துவம், சுயமரியாதை மற்றும் பகுத்தறிவு கொள்கைகளை நினைவுகூர்ந்து, அவற்றை மக்கள் மத்தியில் தொடர்ந்து கொண்டு செல்வதற்கான உறுதிமொழி ஏற்கப்பட்டது.

# மேலக்கோட்டையூரில் புதிய கிளையுடன் KPM Sweets & Bakery பிரம்மாண்ட திறப்பு விழா

மேலக்கோட்டையூர், செப்.18-

செங்கல்பட்டு மாவட்டம் மேலக்கோட்டையூரில் KPM Sweets & Bakery நிறுவனத்தின் புதிய கிளை 13.09.2026 அன்று காலை 10.45 மணியளவில் பிரம்மாண்டமாக திறந்து வைக்கப்பட்டது.



கடந்த 1996ஆம் ஆண்டு முதல் இனிப்பு மற்றும் பேக்கரி உணவுப் பொருட்கள் துறையில் செயல்பட்டு வரும் KPM நிறுவனம், வாடிக்கையாளர்களுக்கு தரமான மற்றும் சுவையான உணவுப் பொருட்களை வழங்கி வருகிறது.

புதிய கிளையின் திறப்பு விழாவில் சிறப்பு அழைப்பாளராக மேற்கு தாம்பரத்தைச் சேர்ந்த கேப்டன் ரியல் எஸ்டேட் அதிபர் மார்க்கெட் ஞானப்பால் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி புதிய கிளையை திறந்து வைத்து வாழ்த்துகளை தெரிவித்தார்.

விழாவில் முன்னாள் மேலக்கோட்டையூர் ஊராட்சி தலைவர் வி.தேவேந்திரன், கவின்குமார், கல்யாணராமன், செந்தில், தனசேகர், சுந்தர்ராஜன், சிம்பு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும் வாடிக்கையாளர்கள், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு KPM Sweets & Bakery நிறுவனத்திற்கு வாழ்த்துகளை தெரிவித்தனர்.

புதிய கிளையில் Sweets, Cakes, Coffee, Juice, Snacks மற்றும் Halwa உள்ளிட்ட பல்வேறு உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

மேலும் மேலக்கோட்டையூரில் ஏற்கனவே KPM Sweets, KPM Protein Center மற்றும் KPM General Stores ஆகிய நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன.

KPM Sweets & Bakery நிறுவனத்தின் உரிமையாளர்களாக கே. பீர் முகமது, பி. சாலிஹ, எஸ். சையது பிமீனா ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர்.

புதிய KPM Sweets & Bakery கிளை வண்டலூர் கேளம்பாக்கம் பிரதான சாலை, மேலக்கோட்டையூர் பகுதியில் அமைந்துள்ளது.

தரமான உணவு, சுவை மற்றும் சிறந்த சேவையுடன் KPM Sweets & Bakery தனது சேவையை தொடர்ந்து வழங்கி வருகிறது.

# தந்தை பெரியார் பிறந்தநாள் விழா; பெரியார் பட ஊர்வலம்





தேனி, செப்.18–

தேனி நகரில் பழையபள்ளிவாசல் அருகில் பெரியார் படஊர்வலம் தொடங்கி பழைய பேருந்து நிலையம் அம்பேத்கர்திடலில்முடிவடைந்தது. இந்நிகழ்விர்க்கு பூமணிகண்டன் தலைமை தாங்கினார். வரவேற்புரை லோ.முத்துசாமி மாவட்ட துணை செயலாளர் முன்னிலைகருப்பு சட்டை நடராஜன்காப்பாளர்ரா. வெங்கடேசன் மாவட்ட இளைஞரணி தலைவர் பெரியார் பெருந்தொண்டர் அன்னக்கொடி கலந்துகொண்டனர்.

மேலும் தோழமை இயக்கஅமைப்புகள் மற்றும் தோழர்கள்

சிபிஎம்வீரமணி மாவட்ட துணை செயலாளர் விவசாயதொழிலாளர் சங்கம் விடுதலை சிறுத்தைகள் கட்சி

அன்பு வடிவேல் மாவட்டபொருளாளர் நகர செயலாளர் காடுவெட்டி கருப்பு

ஒன்றிய துணைச் செயலாளர் வீர சங்கிலி கண்ணன் சண்முகம் வீர தெய்வம் கண்ணன் இளம் சிறுத்தைகள் SD-PIநகரத் தலைவர் சையுதின் நகரச் செயலாளர் காதர் சுல்தான் நகர தலைவர் அன்சாரி ஆதித்தமிழர் பேரவைமாநில தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் வி பெ சுரேஷ் வடக்கு மாவட்ட செயலாளர் நீல கனலன் மேற்கு மாவட்ட செயலாளர் அதியர் மணி மாவட்டத் துணைச் செயலாளர் பிரதாபன் ஒன்றிய செயலாளர் அறிவழகன் மாவட்ட நிதி செயலாளர் சரிதா நகர துணை செயலாளர் நாச்சியம்மாள் மாவட்ட மகளிர் அணி பொறுப்பாளர் பிரித்தா

தமிழ் புலிகள் கட்சி மண்டல செயலாளர் சேகர் தெற்கு மாவட்ட செயலாளர் வைரமுத்து பெரியகுளம் பாராளுமன்றதொகுதி பொறுப்பாளர் பால தமிழரசுசவுடையன் பெருமாள் வினித் சங்கிலி மாவட்ட துணை செயலாளர்பாண்டியன்ஜய்யம்பட்டி உதயகுமார் ரஜினி மாரி ஆதித்தமிழர் கட்சி மாவட்ட செயலாளர் முல்லை அழகர் மாவட்டஅமைப்பாளர் மாரி சுரேஷ் மாவட்ட பொருளாளர் பி ராமசாமி ஆண்டிபட்டிஒன்றிய செயலாளர்சென்ராயன் பெரியகுளம் ஒன்றிய செயலாளர் மீசை முருகன் தேனி ஒன்றிய துணை சிவக்குமார் தேனி ஒன்றியஆலோசகர் பால் துறை ஆண்டிபட்டி ஒன்றிய இணைச் செயலாளர்அஜித்குமார்மற்றும் சமூக ஆர்வலர் ராமசாமிதிராவிட தமிழர்கட்சி

மாவட்டசெயலாளர் ஈஸ்வரன் மாவட்ட தலைவர் வீர குரு பாலன் கருப்பசாமி திராவிட தமிழன் உள்ளிட்ட தோழர்கள்மனிதநேய மக்கள்கட்சி மாவட்ட செயலாளர் சேக் முகமது மாவட்ட தலைவர் அப்பாஸ் மந்திரி புரட்சித்தமிழர் கட்சி மாநில அமைப்பாளர்பொதுச்செயலாளர் அருந்தமிழ் அரசு சந்திரன் மாவட்ட செயலாளர்சின்னமுத்து மாவட்ட செயலாளர்

சமூக நல்லிணக்க பேரவைமுகமது சபி ஆதித்தமிழர் முன்னேற்ற கழகம்மாவட்டசெயலாளர்

மதுரை வீரன் மாவட்ட தலைவர் ஜெகதீஷ் குமார்மற்றும்

திராவிட கழகத் தோழர்கள் பெரியகுளம்முருகன் பெரியகுளம் ஆண்டவர்வீரபாண்டி மொத்தமாய் தோழர் நாகலட்சுமி உள்ளிட்டநூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் பெரியார் பட ஊர்வலத்தில் கலந்து கொண்டு பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள அம்பேத்கர் திடலில் பெரியார் உருவப்படத்திற்கு முன்பாகசமூக நீதி உறுதிமொழிஎடுத்துக் கொண்டனர்நிகழ்ச்சியின் முடிவில் ஒன்றியசெயலாளர் சென்ராயன் நன்றி கூறினார்.





# மானாமதுரையில் எடப்பாடி பழனிசாமிக்கு அ.தி.மு.க.,வினர் வரவேற்பு

மானாமதுரை, செப்.18–

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் நடைபெற்ற அதிமுக மாநிலங்களவை உறுப்பினர் ஆர். தர்மர் இல்லத் திருமண விழாவில் பங்கேற்பதற்காக, அதிமுக பொதுச் செயலாளரும் முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி கே. பழனிசாமி ராமநாதபுரம் மாவட்டத்திற்குச் சென்றார். எடப்பாடி பழனிசாமி தற்போது அதிமுக சார்பில் எடப்பாடி தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் உள்ளார்.

மானாமதுரை வழியாக அவர் சென்றபோது, சிவகங்கை மாவட்ட அதிமுக செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான செந்தில்நாதன் தலைமையில் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரண்டு வரவேற்பு அளித்தனர்.

நிகழ்வில் மானாமதுரை கிழக்கு ஒன்றியச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான குணசேகரன், மேற்கு ஒன்றியச் செயலாளர் ஜெயபிரகாஷ், வடக்கு ஒன்றியச் செயலாளர் சிவ சிவ ஸ்ரீதரன் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# தாதாசாகேப் பால்கே விருதுக்கு கன்னட நடிகர் அனந்த் நாக் தேர்வு

புதுடெல்லி, செப்.18–

தாதாசாகேப் பால்கே விருதுக்கு பழம்பெரும் கன்னட நடிகர் அனந்த் நாக் (78) தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதுகுறித்து பிஜபி வெளியிட்டுள்ள செய்தியில், “தேர்வுக் குழு பரிந்துரையின் அடிப்படையில், இந்திய திரைப்படத் துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்காகவும், பல தலைமுறைகளைக் கடந்து பலருக்கும் உத்வேகம் அளித்த திரைப் பயணத்துக்காகவும் 2024–ம் ஆண்டுக்கான தாதாசாகேப் பால்கே விருதுக்கு கன்னட நடிகர் அனந்த் நாக் தேர்வு செய்யப்பட்டுள்ளார்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத்தில் செப். 22–ல் நடைபெறவுள்ள 72–வது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் இவ் விருது வழங்கப்படவுள்ளது. பிரதமர் மோடி வாழ்த்து பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், “தாதாசாகேப் பால்கே விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள அனந்த் நாக் அவர்களுக்கு எனது வாழ்த்துகள்.

பல தசாப்தங்களாக அவரது இயல்பான நடிப்பு, குறிப்பிடத்தக்க பன்முகத்தன்மை ஆகியவை இந்திய சினிமாவில், குறிப்பாக கன்னட சினிமாவில் ஆழமான முத்திரையைப் பதித்துள்ளன. ஒரு சிறந்த கலைஞருக்குக் கிடைத்துள்ள தகுதியான கவுரவம் இது” என்று கூறியுள்ளார்.



■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வன கோட்டம், ஏலகிரி மலையில் உள்ள மங்கலம் பகுதியில் சில்வர் ஓக் மரக்கன்றுகளை வனத்துறை அமைச்சர் ஆர்.வீ.இரஞ்சித்குமார் (16.09.2026) அன்று நடவு செய்து துவக்கி வைத்தார். உடன் வேலூர் வனமண்டல தலைமை வனப்பாதுகாவலர் A.S.மாரிமுத்து, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செள.தமிழரசி, மாவட்ட வன அலுவலர் T.K.அசோக்குமார், திருப்பத்தூர் வருவாய் கோட்டாட்சியர் வரதராஜன், உதவி வன பாதுகாவலர்கள் சுந்தரேசன், கோபு, வனச் சரக அலுவலர்கள் (திருப்பத்தூர்) குமார், (சிங்காரபேட்டை) சதீஷ்குமார் மற்றும் திருப்பத்தூர் வனக்கோட்ட வனப்பணியாளர்கள் ஆகியோர் உள்ளனர்.

# பழனி அருகே பக்தர்கள் ஏராளமானோர் திரளாக கலந்து கொண்ட சாம்புராயர் திருக்கோயில் கும்பாபிஷேகம்

திண்டுக்கல், செப்.18–

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ள கோதைமங்கலம் நாலாவது வார்டு பகுதியில் அமைந்துள்ள சாம்புராயர் திருக்கோயிலில் மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது.

மேலும் இந்தக் கோயிலில் அமைந்துள்ள பரிவார தெய்வங்களாகிய அருள்மிகு விநாயகர், அருள்மிகு காளி தேவி, மின்னடியன் சாமி ஆதிக்கிழவன் தெய்வங்களுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்றது.



முன்னதாக காலை 6.45 மணிக்கு மணி முதல் 7.25 மணிக்குள் கன்னியா லக்னத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து இந்த விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு கும்பாபிஷேக தீர்த்தம் தெளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கோதைமங்கலம் நாலாவது வார்டு பொதுமக்கள் மற்றும் சுற்றியுள்ள பக்தர்கள் என பலரும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதனிடையே ஆடல், பாடல் மற்றும் முளைப்பாரி கொண்டு செல்லுதல் போன்ற நிகழ்வுகள் அரங்கேறியதுடன் கலந்து கொண்ட அனைவருக்கும் சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது.

# தாம்பரம் மாநகராட்சி 3வது மண்டல குழு தலைவர் ச.ஜெயபிரதிப் மீண்டும் பொறுப்பு ஏற்ப்பு

தாம்பரம், செப்.18–

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி மண்டல மூன்றில் 40வது வார்டில் திமுக பிரமுகரான ஜெய பிரதீப் உள்ளாட்சி தேர்தலில் தனக்கு சீட்டு வழங்காததால் சுயேசியாக நின்று வெற்றி பெற்றார் மீண்டும் மண்டல குழு தலைவருக்கும் போட்டியிட்டு திமுக வேட்பாளரை தோற்கடித்து மண்டலம் மூன்றில் மண்டல குழு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் இதனால் திமுகவில் இருந்து ஓரங்கட்டப்பட்டார் பின்பு பல்வேறு காரணங்களை கூறி இவரின் மண்டல குழு தலைவர் பதவி பறிக்கப்பட்டது இதை அடுத்து ச.ஜெய பிரதீப் நீதிமன்றத்தை நாடினார் மேலும் திமுகவிலிருந்து விலகி தமிழக வெற்றி





கழகத்தில் தன்னை இணைத்தும் கொண்டார் நீதிமன்றம் இவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டது செல்லாது என அறிவித்ததின் பேரில் மண்டலக் குழு தலைவராக பொறுப்பேற்றார் அவருக்கு அவரது குடும்பத்தினர் மாமன்ற உறுப்பினர்கள் சால்வை அணிவித்து இனிப்புகள் வழங்கி பட்டாசு வெடித்து வாழ்த்து தெரிவித்தனர்



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், RDS நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு நிதியின் கீழ், திருப்பத்தூர் மற்றும் ஜோலார்பேட்டை நகராட்சிகளுக்கு ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் 15 மின்கல வாகனங்களை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் ஆர்.வீ.இரஞ்சித்குமார் (17.09.2026) அன்று திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் Dr.N.திருப்பதி, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.பாலசுப்ரமணியன் ஆகியோர் முன்னிலையில், சம்பந்தப்பட்ட நகராட்சிகளுக்கு வழங்கி, கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.பாலசுப்ரமணியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செள.தமிழரசி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பாபு, RDS நிறுவன தலைவர் சரவணன், நகராட்சி ஆணையாளர்கள் சாந்தி (திருப்பத்தூர்), இளையராணி (ஜோலார்பேட்டை) ஆகியோர் உள்ளனர்.



# பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாள் விழா

## கிருஷ்ணகிரியில் பாஜகவினர் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்

கிருஷ்ணகிரி, செப்.18–

கிருஷ்ணகிரியில் பாஜகவினர் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்

பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதன் ஒரு பகுதியாக, கிருஷ்ணகிரி ரவுண்டானா அருகே நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாவட்ட தலைவர் கவியரசு தலைமை வகித்தார். பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளை சிறப்பிக்கும் வகையில், கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பட்டாசுகள் வெடித்து கொண்டாடினர். தொடர்ந்து, அப்பகுதியில் இருந்த பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட துணைத் தலைவர் லோகேஷ் குமார், ஐ.டி. பிரிவு மாவட்ட தலைவர் அறிவுலக மேதை, கிழக்கு மண்டல தலைவர் குமரேசன், மாநில செயற்குழு உறுப்பினரும் முன்னாள் மாவட்ட தலைவருமான முனிராஜ் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மேலும், பாரதிய ஜனதா கட்சியின் மாவட்ட, மண்டல மற்றும் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், தொண்டர்கள் என பலர் பங்கேற்று பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளை உற்சாகமாக கொண்டாடினர். நிகழ்ச்சியின் முடிவில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.



# பாரத பிரதமர் நரேந்திரமோடி பிறந்த நாள் விழா- கோவில்களில் சிறப்பு பூஜை

மாதவரம், செப்.18–

மாதவரம் தொகுதி செங்குன்றத்தில் உள்ள பெருமாள் கோவில் மற்றும் விளாங்காடுபாக்கம் ஊராட்சி கண்ணம்பாளையம் கிராமத்தில் உள்ள நாகாத்தம்மன் கோவிலில் பாரத பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்த நாளை முன்னிட்டு புழல் மண்டல் சென்னை மேற்கு மாவட்ட பாஜக பொதுசெயலாளர் மாலாமதியழகன் ஏற்பாட்டில் சிறப்பு பூஜைகள் செய்து பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் நிர்வாகிகள் ஹரிகிருஷ்ணன், சுரேகாஹரி, ரமேஷ், மீனுவைஷ்ணவ், மணவாளன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# பாரத பிரதமர் நரேந்திர மோடி 76 ஆவது பிறந்தநாள் விழா

திருப்பத்தூர், செப்.18–

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை கடைத்தெரு பகுதியில் திருப்பத்தூர் மாவட்ட அயழக தமிழர் பிரிவு ஜோலார்பேட்டை நகர பாரதிய ஜனதா கட்சி இணைந்து கொண்டாடும் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் 76 வது பிறந்தநாள் ஜோலார்பேட்டை நகரத் தலைவர் மனோஜ் குமார் தலைமையில் நடைபெற்றது. பாரதிய ஜனதா கட்சியின் மாவட்ட தலைவர் ரவீந்திரன் முன்னிலையில் 25 கிலோ கேக் தாமரை வடிவத்தில் கொண்டுவரப்பட்டு குத்து விளக்கேற்றி கேக் வெட்டி கொண்டாடினார்கள். இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர் சுந்தரேசன், மாவட்டத் துணைத் தலைவர் மணி, மாவட்ட செயலாளர் ஆனந்தன், மாவட்ட விவசாய அணி தலைவர் ரஞ்சித், மாவட்டத் துணைத் தலைவர் வெங்கடேசன், மகளிர் அணி லோகேஸ்வரி, சபீனா மற்றும் பாரதிய ஜனதா கட்சி தொண்டர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




# தேனியில் தமிழ்நாடு மின்வாரிய எம்ப்ளாயிஸ் பெடரேஷன் பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்

தேனி, செப்.18–

தமிழ்நாடு மின்வாரிய எம்ப்ளாயிஸ் பெடரேஷன் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் மின்வாரிய தேனி மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு நடைபெற்றது.. ஆர்ப்பாட்டத்திற்கு திட்ட தலைவர் காமராஜ் தலைமை தாங்கினார். திட்டச் செயலாளர் மூக்கையா முன்னிலை வைத்தார். ஆர்ப்பாட்டத்தில் செயல் அலுவலர் முத்து முருகன், அமைப்பு செயலாளர் விவேகானந்தன் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது காலி பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும். பகுதிநேர சுகாதார பணியாளர்கள் இல்லாத அலுவலகங்களுக்கு பணியாளர்கள் அனுமதிக்க வேண்டும். கேங்மேன் பணியாளர்களை கள உதவியாளர்களாக மாற்ற வேண்டும். விடுபட்ட கேங்மேன்களை பணி நியமனம் செய்ய வேண்டும் என்பன உள்பட 17 கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினார்கள்.





# அரிமண்டபம் இராஜாக்கள் குடியிருப்பில் முளைப்பாரி உற்சவ விழா

மானாமதுரை, செப்.18–

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே மேலப்பசலை ஊராட்சிக்குட்பட்ட அரிமண்டபம் இராஜாக்கள் குடியிருப்பு சுந்தரவல்லி அய்யனார் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் முளைப்பாரி உற்சவ விழா பாரம்பரிய முறைப்படி நடைபெற்றது.

கிராம மக்களின் குறைகள் தீரவும், விவசாயம் செழிக்கவும், மழை வேண்டியும் நடைபெறும் இந்த விழாவை முன்னிட்டு, ஏழு நாட்களுக்கு முன்பாக சுமார் 200 முளைப்பாரி ஓடுகளில் நவதானியங்கள் விதைக்கப்பட்டு, காப்புக் கட்டி விரதம் இருந்து



வளர்க்கப்பட்டன.

முளைப்பாரிகள் நன்கு வளர்ந்ததும் கோவில் முன்பு வைத்து, கடந்த ஏழு நாட்களாக பெண்கள் மற்றும் கிராம மக்கள் கும்மிப்பாட்டு, ஒயிலாட்டம் உள்ளிட்ட பாரம்பரிய நிகழ்ச்சிகளுடன் விழாவைக் கொண்டாடினர்.

செவ்வாய்க்கிழமை இரவு சுந்தரவல்லி அய்யனாருக்கு சிறப்பு படையல் வைத்து வழிபாடு நடைபெற்றது. பெண்கள் மூன்று, ஐந்து, ஏழு மற்றும் ஒன்பது சட்டிகளில் சட்டி சோறு எடுத்து வந்து கோவில் முன்பு படையலிட்டு வழிபட்டனர்.

தொடர்ந்து புதன்கிழமை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பெண்கள் முளைப்பாரி ஓடுகளை தலையில் சுமந்து ஊர்வலமாகச் சென்றனர். பின்னர் விவசாயத்திற்குப் பயன்படும் கண்மாயில் முளைப்பாரிகளை நீரில் கரைத்து, சூரிய பகவானை நோக்கி வழிபட்டு தங்களது நேர்த்திக்கடனை நிறைவேற்றினர்.

விழாவில் அரிமண்டபம் இராஜாக்கள் குடியிருப்பு கிராம மக்கள் திரளாக கலந்து கொண்டு வழிபட்டனர்.



■ செப்டம்பர் 17 தந்தை பெரியார் (148)பிறந்த நாள் தாராபுரத்தில் உள்ள பெரியார் சிலைக்கு ஆதித்தமிழர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாவட்டச் செயலாளர் குண்டடம் காளிமுத்து தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது, இந் நிகழ்வில் மாவட்டத் தலைவர் ராமன், மாவட்ட இளைஞரணி செயலாளர் சிவா, குண்டடம் மேற்கு ஒன்றிய தலைவர் மணிகண்டன், முருகேசன்,மணி,குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்,

# சிவகங்கையில் ப.சிதம்பரம் 81-வது பிறந்தநாள் விழா; காங்கிரஸ் நிர்வாகிகள் கொண்டாட்டம்

சிவகங்கை, செப்.18–

சிவகங்கையில் முன்னாள் மத்திய அமைச்சரும், மாநில ங்களவை உறுப்பினரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ப.சிதம்பரத்தின் 81-வது பிறந்தநாளை முன்னிட்டு சிவகங்கை நகரில் காங்கிரஸ் நிர்வாகிகள் சார்பில் அன்னதானம் மற்றும் இனிப்பு வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ப.சிதம்பரம் தற்போது தமிழ்நாட்டிலிருந்து காங்கிரஸ் சார்பில் மாநிலங்களவை உறுப்பினராக உள்ளார்.

சிவகங்கை நகரத் தலைவரும் நகர்மன்ற உறுப்பினருமான விஜயகுமார் ஏற்பாட்டில், சிவகங்கை சிவன் கோவிலில் சுமார் 50 பேருக்கு அறுசுவை சைவ உணவு அன்னதானமாக வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் காங்கிரஸ் தலைமைப் பொதுக்குழு உறுப்பினரும், வீரமங்கை வேலுநாச்சியார் அரிமா சங்கத்தின் பட்டயத் தலைவருமான அரிமா வித்யா கணபதி, மாவட்ட துணைத் தலைவர்





சண்முகராஜன், மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவியும் முன்னாள் மாவட்ட கவுன்சிலருமான ஆரோக்கிய சாந்தாராணி, வட்டாரத் தலைவர்கள் கரும்பாவூர் உடையார், காளையார்கோவில் மதியழகன், காளிமுத்து, நாமனூர் முருகானந்தம், சேவியர் அருள்தாஸ், நாலுகோட்டை கருப்பையா உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இதேபோல், சிவகங்கை நகரப் பேருந்து நிலையத்தில் காங்கிரஸ் பிரமுகர் லெட்சுமணன் ஏற்பாட்டில் பொதுமக்கள், பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

இதில் காங்கிரஸ் மூத்த முன்னோடிகள் வெள்ளைச்சாமி, குமரன் மெஸ் சிதம்பரம், வட்டாரத் தலைவர்கள் காளையார்கோவில் மதியழகன், கரும்பாவூர் உடையார், ஆரோக்கிய சாந்தாராணி, நாமனூர் முருகானந்தம், முருகன், மகாலிங்கம், கீழக்குளம் ரவிச்சந்திரன், சந்துரு, காளிமுத்து, நாலுகோட்டை கருப்பையா, விக்னேஷ் உள்ளிட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# ஏசியா இன்டர்நேஷனல் கல்ச்சர் அகாடமியில் இருந்து P.மதன்குமார் - பச்சையப்பன் சமூக சேவையினை பாராட்டி கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்கினார்

திருவலங்காடு, செப்.18–

கடந்த 14 9 2026 ஆம் திங்கட்கிழமை காலை 11:00 மணி அளவில் மதன்குமார் பச்சையப்பன் சொசைட்டி ஆப் சேலஞ்சர்ஸ் சோசியல் சார்ட்டபிள் டிரஸ்ட் மாற்றுத்திறனாளிகளின் மாநில தலைவர்,

அம்மா சஞ்சிகலா வயது 42 கடந்த 23 ஆண்டு காலமாக முதுகுக் தண்டுவடம் மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை செய்து வருகிறார்.

சமூக சேவைத் துறையில் தன்னலமற்ற சேவையாற்றி, சமூக நலனுக்காக தொடர்ந்து பாடுபட்டு வருவதை பாராட்டி, P.மதன்குமார் சர்வதேச அளவில் மதிப்புமிக்க கௌரவ டாக்டர் பட்டம் சொசைட்டி ஆப் சேலஞ்சர்ஸ் சோசியல் சாரிட்டபிள் டிரஸ்ட்



நிறுவனத் தலைவர் டாக்டர் அருண் சின்னதுரை, சிறப்பு விருந்தினராக செங்கல்பட்டு தலைவர் மதிப்புக்குரிய அசோக் குமார் அவர்களும் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் வெண்விழி அருண், இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கடந்த மாதம் *29-08-2026* அன்று நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கம் மற்றும் பட்டமளிப்பு விழாவில் *"ESTABLISHING ASIA INTERNATIONAL CULTURE"* என்ற தலைப்பில் நடைபெற்ற விழாவில், சமூக சேவை பிரிவில் (Reg No: HAD/2926/1853) இந்த கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

பல ஆண்டுகளாக முதுகுத்தண்டுவடம் மாற்றுத்திறனாளிகளின் சமூகத்தில் பின்தங்கிய மக்களின் முன்னேற்றத்திற்காகவும், மறுவாழ்வு பயிற்சிக்கும் வாழ்வாதாரத்துக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தியும் தன்னலமற்ற சேவையாற்றி வந்ததை கௌரவித்து, பல்கலைக்கழக தேர்வுக்குழு இவரை இந்த உயரிய விருதுக்கு தேர்வு செய்துள்ளது.

இந்த கௌரவ டாக்டர் பட்டம் பெற்ற P.மதன்குமார் அவர்களுக்கு அவரது குடும்பத்தினர், கோபி, சசிகுமார், தேவி, Amb,Dr.பச்சையப்பன், மற்றும் பல நண்பர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் தங்களது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர்கள் மேலும் அவர் சமூக சேவையில் தொடர்ந்து பல சாதனைகளை படைக்க வேண்டும் எனவும் வாழ்த்தினர்.

# வீரக்கோயில் ஸ்ரீவீரசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மகா கும்பாபிஷேக சிறப்பாக நடைபெற்ற விழாவில் கோபி சுப்பிரமணியம் பாராட்டு

திருத்தணி, செப்.18–

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், வீரக்கோயில் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ வள்ளி தெய்வானை உடனுறை ஸ்ரீ வீரசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா கடந்த 14-09-2026 திங்கட்கிழமை காலை 9.00 முதல் 10.30 மணிக்குள் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இவ்விழாவை முதுகுத்தண்டுவடம் மாற்றுத்தி றனாளிகள் அமைப்பின் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்ட பொறுப்பாளர் கோபி சுப்பிரமணியம் முன்னின்று சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தி முடித்தார். அவருடன் அவரது குடும்பத்தினர் G. கிரிஜா இணைந்து இறைப்பணி செய்தனர்.

இந்த கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த பங்கேற்பாளர்கள் விவரம்: மதன்குமார்

சசிகுமார், பச்சையப்பன், சுதாகர், வெங்கடேசன், கந்தன் குமார், ஜான்,





தேவி, வெங்கடேசன் (திருவாலங்காடு), வெங்கடேசன் (பட்டாபிராம்), தர்மன், பழனி, செல்வி. ஹாசினி, செல்வி. சாசனஸ்ரீ, சொசைட்டி ஆப் சேலஞ்சர்ஸ் சோசியல் சாரிட்டபிள் டிரஸ்ட் நிறுவனத் தலைவர் Dr.அருண் வெண்விழி அருண் உயர் நீதிமன்றம் வழக்கறிஞர், SOCSCT செங்கல்பட்டு தலைவர் மதிப்புக்குரிய அசோக் குமார் மற்றும் ஊர் பொதுமக்கள், பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

விழாவில் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் கும்பாபிஷேக அருட்பிர சாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

மாற்றுத்தி றனாளியாக இருந்தும் தன்னம்பிக்கையுடன் சமூக சேவை மற்றும் ஆன்மீக சேவையில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் கோபி சுப்பிரமணியம் பொதுமக்களும், பக்தர்களும், பல்வேறு சமூக அமைப்பினரும் வெகுவாக பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.



# 65 ஆயிரம் காலிப்பணியிடங்களை நிரப்பக் கோரி மின்வாரிய ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

சிவகங்கை, செப்.18–

சிவகங்கையில் தமிழ்நாடு மின்வாரிய ஊழியர்கள் கூட்டமைப்பு (TNEB Employees Federation) தொழிற்சங்கம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சிவகங்கை மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலக நுழைவாயில் முன்பு நடைபெற்ற கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டத்திற்கு திட்டத் தலைவர் வி. சாத்தையா தலைமை வகித்தார். செயல்தலைவர் கே.என். காளிமுத்தன், திட்டப் பொருளாளர் கே. ஆனந்தசெல்வம், மாநில இணைச் செயலாளர் எஸ். செல்லப்பன், அமைப்புச் செயலாளர் எஸ். காஜாமுகைதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிவகங்கை திட்டச் செயலாளர் கே.ஆர். கே. சுப்பிரமணியன் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினார்.

மின்வாரியத்தில் உள்ள 65 ஆயிரம் காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும்; விடுபட்ட கேங்மேன் பணியாளர்கள் தொடர்பான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்; ஒப்பந்தப் பணிகளுக்கு ஐடிஐ படித்தவர்களை நியமிக்க வேண்டும்; மின்வாரியத்தில் தனியார்மய நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும்; அனைவருக்கும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை வழங்க வேண்டும்; 9,613 கேங்மேன் பணியாளர்களை கள உதவியாளர்களாக வகைமாற்றம் செய்ய வேண்டும்; மாறுதல் உத்தரவு பெற்ற கேங்மேன் பணியாளர்களை உடனடியாக பணிவிடுவிப்பு செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.

இதில் மின்வாரிய ஊழியர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். இணைச் செயலாளர் கார்த்திக் நன்றி கூறினார்.



# தந்தை பெரியார் பிறந்தநாள்: சிலைக்கு மாலை அணிவித்து தி.மு.க.,வினர் மரியாதை

சிவகங்கை, செப்.18–

சிவகங்கையில் தந்தை பெரியாரின் 147-வது பிறந்தநாளையொட்டி, சிவகங்கை திமுக தொண்டரணி மாவட்ட துணை அமைப்பாளரும், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினருமான வண்டவாசி கா. கோவிந்தராஜன் தலைமையில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியால் நிறுவப்பட்ட தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம் வளாகத்தில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு திமுக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தமிழ்நாட்டில் சமத்துவபுரம் திட்டம் 1997-ஆம் ஆண்டு கருணாநிதி தலைமையிலான அரசால் தொடங்கப்பட்டது.

வண்டவாசி கா. கோவிந்தராஜன் கடந்த 26 ஆண்டுகளாக பெரியாரின் பிறந்தநாளன்று அவரது சிலைக்கு தொடர்ந்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வருவதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் சமத்துவபுரம் திமுக கிளைக் கழகச் செயலாளர் முரசொலி மதியழகன், கலைஞர் பாசறை மோகன் உள்ளிட்ட திமுகவினர் கலந்து கொண்டனர்.



# பெரியார் பிறந்தநாள்: சிவகங்கை த.வெ.க., பிரமுகர் அரிமா கல்பனா சபேசன் மரியாதை

சிவகங்கை, செப்.18–

தந்தை பெரியாரின் பிறந்தநாளையொட்டி, சிவகங்கை பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு தமிழக வெற்றிக் கழக பிரமுகரும் சமூக ஆர்வலருமான அரிமா கல்பனா சபேசன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

முன்னதாக, சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் குழந்தைராணி நாச்சியார் மற்றும் சிவகங்கை தெற்கு மாவட்ட தவெக செயலாளர் எஸ். முத்துபாரதி ஆகியோர் தலைமையில் கட்சி நிர்வாகிகள் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து உறுதிமொழி ஏற்றனர்.

அதனைத் தொடர்ந்து தவெக பிரமுகரும் சமூக ஆர்வலருமான அரிமா கல்பனா சபேசன், பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161